# மெட்ரோ ரயில் நிலையங்களில் இலவச தொலைபேசி சேவை

சென்னை, மார்ச் 9: சென்னையில் உள்ள 19 சுரங்கப் பாதை மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிக்காக இலவச தொலைபேசி சேவ்வயை மெட்ரோ ர்யில் நிர்வாகம் தொடங்கி உள்ளது.

சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின்படி 32 மெட்ரோ ரயில் நிலையங்களில் 19 மெட்ரோ ரயில் நிலையங்கள் சுரங்கப்பாதையில் அமைந்துள்ளன. இந்த ரயில் நிலையங்களில் செல்போன் சிக்னல் பிரச்னையை தீர்க்க பயணிகள் தரப்பில் தொடர் கோரிக்கைகள் வைக்கப்பட்டு வந்தன. இப்பிரச்னையை தீர்க்க மெட்ரோ ரயில் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில், சுரங்கப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள 19 மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகள் வசதிக்காக இலவச தொலைபேசி சேவையை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.



இதுகுறித்து மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

பயணிகளுக்கு அவசர காலத்தில் உதவியாக இருக்கும் வகையில் தற்போது 19 மெட்ரோ ரயில் நிலையங்களில் தொலைபேசி சேவை நிறுவப்பட்டுள்ளது. இது, பயணிகள் சேவை மையத்திலேயே அமைக்கப்பட்டுள்ளதால் எளிதாக பயணிகள் சேவையை பெற முடியும். அனைத்து பயணிகளுக்கும் இந்த சேவை இலவசமாக அளிக்கப்படும். பயணிகளுக்கு வழங்கப்படும் சேவைகளில் ஏதேனும் குறைகள் இருப்பின் அல்லது ஏதாவது அவசர உதவி தேவைப்பட்டால் உடன்டியாக ரயில் நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியை தொடர்பு கொள்ளலாம். அவர் எந்த வித பதிலும் அளிக்காவிட்டால் நீங்கள் உடனடியாக தலைமை கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு தொடர்புகொள்ளலாம்.

மேலும், திருமங்கலம் மற்றும் எழும்பூர் மெட்ரோ ரயில் நிலையங்களில் செல்பேசி சிக்னல் சேவை தற்போது கிடைக்கும். சைதாப்பேட்டை - டி.எம்.எஸ் வரையிலும் சிக்னல் சேவை கிடைக்கும். விரைவில் மற்ற சிம் கார்டுகளின் சிக்னல் சேவை இந்த மாத இறுதிக்குள் கிடைக்கும். மேலும், 2 முதல் 3 மாதத்தில் சென்ட்ரல் மற்றும் வண்ணாரப்பேட்டை சுரங்க வழித்தடத்தில் சிக்னல் சேவை கிடைக்கும். இதற்கான பணிகள் நடந்து வருகிறது.

இவ்வாறு கூறினார்.